வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 02.04.2026 வியாழக்கிழமை | இதழ் : 86 | பக்கங்கள் : 08




# இலங்கைக்கு எந்த நேரமும் எரிபொருள் வழங்க தயார்!

## உறுதியளித்தது ரஷ்யா



கொழும்பு, ஏப். 02

இலங்கையில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும், எரிபொருள், எரிவாயு மற்றும் நிலக்கரி உள்ளிட்ட எரிசக்தி மூலங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு ரஷ்யா தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,


அமைச்சர் பிமல் ரத்நாயக்க ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, அந்நாட்டின் எரிசக்தி பிரதி அமைச்சர் ரமன் மர்ஷாவின் இதனை உறுதிப்படுத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் முன்னெடுக்கப்படும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான ஆதரவைத் தொடர்ச்சியாக வழங்கவும் பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

07

## அதலபாதாளத்தில் நாடு!

### மிஹிந்தலை விகாராதிபதி சாடல்



கொழும்பு, ஏப். 02

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்ததாகக் கூறப்படும் முறைமை மாற்றம் என்பது நாட்டை அடியோடு அதலபாதாளத்துக்கே கொண்டு சென்றுள்ளதுடன் குற்றவாளிகளுக்கு சிறைச்சாலைக்குள் கேக் ஊட்டும் ஒரு கேவலமான கலாசாரத்தை அநுர ஆட்சியாளர்கள் உருவாக்கியுள்ளதாக மிஹிந்தலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி தம்மரத்ன தேரர் குற்றச்சாட்டியுள்ளார்.

மிஹிந்தலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நாட்டில் இன்று சட்டமும் ஒழுங்கும் முற்றாக சீர்குலைந்துள்ள நிலையை காண முடிகின்றது. மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே போன்றவர்கள்

07

## கிளிநொச்சி ம.வி. மாணவன் திருக்குமரன் சாதனை! அகில இலங்கை ரீதியில் கணிதப் பிரிவில் முதலிடம்!!

### வணிகப் பிரிவில் காத்தான்குடி பர்தான் முதலிடம்



கிளிநொச்சி, ஏப். 02

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, கணிதத்துறையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெய்வேந்திரன் திருக்குமரன் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

இந்த விடயத்தை பாடசாலையின் அதிபர் இளவேந்தி நிர்மலராஜ் உறுதிப்படுத்தினார்.

மாணவன் தெய்வேந்திரம் திருக்குமரன், கணிதத்துறையில் சர்வதேச மற்றும் தேசிய அளவில் சாதனை படைத்தவர்.

2022 இல் நோர்வேயில் நடைபெற்ற

07

## வீதி விளக்குகள் அணைப்பது திருடர்களுக்கே நல்ல வசதி!

### அரசை சாடுகின்றார் ராஜித

கொழும்பு, ஏப். 02

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வீதி விளக்குகளை அணைத்து வைப்பதானது திருடர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் ஒரு செயற்பாடு என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07

## மருத்துவர் இடமாற்றங்களில் பெரும் அரசியல் தலையீடு!

### சுகாதார அமைச்சர் நளிந்தவுக்கு மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 02

மருத்துவர் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு நடைபெறுவதாகக் கூறப்படுவது தொடர்பாக, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவர்கள் யாருடைய உத்தரவுகளுக்கும்

07

## தையிட்டியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 02

தையிட்டியில், தமிழ் மக்களின் காணியில் எந்தவித அனுமதியும் இன்றி அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு

07

## சர்வதேச நிறுவனங்களின் அடிமைகளாகாமல் மக்கள் நலன்புரி திட்டங்களை ஆரம்பியுங்கள்!

### சஜித் பிரேமதாஸ அரசுக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 02

அரசாங்கம் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிடியில் சிக்கி அடிமையாகாமல், உடனடியாக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய நலன்புரித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் இதனை நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எண்ணெய் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் மீண்டும்

07

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் அடையாள பணி புறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 02

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று 24 மணி நேர அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நியாயமற்ற இடமாற்றம் நிறுத்தப்படவேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

## எரிபொருளைச் சிக்கனத்துடன் மக்கள் பயன்படுத்தவேண்டும்!

கொழும்பு, ஏப். 02

நாட்டு மக்கள், எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான

07

## தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனாதிபதியிடன் இன்று பேச்சு

கொழும்பு, ஏப். 02

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு சந்தித்து உரையாடவுள்ளது.

இந்த சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், எனக்கும் இடையில் அண்மையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது, ஏற்பட்ட உடன்பாட்டின்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து கல்லூரியில் 64 மாணவர்களுக்கு 3 ஏ!

யாழ்ப்பாணம், ஏப். 02

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகளும் வெளியாகியுள்ளன.

இதன்படி, 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று 64 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் உயிரியல் அறிவியல் பாடத்தெரிவில் 19 மாணவர்கள், இயற்பியல் அறிவியல் பாடத்தெரிவில் 42 மாணவர்கள், வர்த்தகப் பிரிவில் 1 மாணவர் மற்றும் கலைப் பிரிவில் 2 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மேலும், 2 ஏ பெறுபேறுகளைப் பெற்று 31 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஏ 2 பி பெறுபேறுகளைப் பெற்று 21 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பங்களாதேஷ் சிறையிலிருந்த 6 இலங்கை மீனவர் விடுதலை!

கொழும்பு, ஏப். 02


பங்களாதேஷில் சிறையில் இருந்த 6 இலங்கை மீனவர்கள் எட்டு மாதங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததற்காக எட்டு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு இன்று அவர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

2025, ஜூலை 16 அன்று, "சுடு துவா 4" என்ற பல நாள் மீன்பிடிக் கப்பலில் பயணம் செய்த மீனவர் குழுவினர், கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் பேரில் பங்களாதேஷ் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். அந்த மீனவர்கள் பங்களாதேஷின் சிட்டகொங் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு, அவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது மேற்குறித்த மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவு நாள் வவுனியாவில்



வவுனியா, ஏப். 02

வவுனியாவில் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவு தினம் நேற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களாலும், தமிழ்மணி அகளங்கனாலும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தொடர்பான நினைவு பேருரைகள் நிகழ்த்தப்பட்டன.

மாநகரசபை ஆணையாளர் திருமதி சி.சிவரஞ்சினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குமார ஜயக்கொடி பதவியில் நீடிப்பார்!

கொழும்பு, ஏப். 02

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தனது பதவியில்தொடர்ந்து நீடிப்பார் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர், குறித்த குற்றச்சாட்டுகள் அமைச்சர் குமார ஜயக்கொடி அரச உர நிறுவனமொன்றில் அதிகாரியாகப் பணியாற்றிய காலப்பகுதியில் இடம்பெற்றவை எனக் குறிப்பிட்டார்.

கொள்முதல் நடைமுறைகளை மீறியதாகக் கூறப்படும் இந்த ஊழல் தொடர்பான வழக்கை தற்போதைய அரசாங்கமே தாக்கல் செய்துள்ளதால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதில் எவ்வித தலையீடுகளையும் செய்யவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# இலங்கையின் எரிவாயுச் சந்தையில் புதிய நிறுவனங்கள் தேவையில்லை

## வர்த்தக, வாணிப அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 02

உள்நாட்டு எரிவாயு சந்தையில் புதிய நிறுவனங்களை இணைத்துக்கொள்வதற்கான அவசியம் தற்போது இல்லையென வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு அறிவித்துள்ளது.

லிட்ரோ மற்றும் லாப் ஆகிய இரண்டு நிறுவனங்களும் நாட்டின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன, நாட்டின் எரிவாயு விநியோகத்தில் 80 வீதத்தை லிட்ரோ நிறுவனமும், எஞ்சிய 20 வீதத்தை லாப் நிறுவனமும் வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த சில வாரங்களாக நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டிற்கு லாப் நிறுவனத்தின் விநியோக வலையமைப்பில் ஏற்பட்ட ஒரு மாத கால முடக்கமே காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது அந்த நிலைமை சீராகியுள்ளதோடு, மேலதிகமாக 5,000 மெற்றிக் தொன் எரிவாயுவை லிட்ரோ நிறுவனம் சந்தைக்கு விடுவித்துள்ளது.

நாட்டில் சுமார் 7 மில்லியன் எரிவாயு சிலிண்டர்கள் புழக்கத்தில் உள்ளபோதிலும், தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் நுகர்வோர் மேலதிக சிலிண்டர்களை நிரப்பி வைத்திருப்பதே தற்காலிக விநியோகப் பாதிப்புகளுக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இம் மாத எரிவாயு விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பும் என அவர் உறுதிப்படத் தெரிவித்துள்ளார். (அ)

# இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களை கடற்படையினர் கட்டுப்படுத்த தவறுகின்றனர்

## ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஏப். 02

முல்லைத்தீவு உட்பட வடபகுதி கடற்பரப்புக்களில் அதிகரித்துள்ள இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயல்பாடுகளை கடற்படையினர் கட்டுப்படுத்த தவறுவதாக குற்றஞ்சாட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடற்படையின் கண்காணிப்புக் கருவிகள் பழுதடைந்துள்ளனவா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாக தம்மால் கண்காணிக்கப்படுவதாகவும், அத்தகைய அத்துமீறல்களுக்கெதிராக தம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கடற்படை அதிகாரி பதிலளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற, சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்திலேயே குறித்த விடயம் பேசப்பட்டுள்ளது.



இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு கடற்பரப்புக்களில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக இந்திய இழுவைப் படகுகள் கடற்கரையை அண்மித்த பகுதிகளுக்கு வருகை தந்து அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

எவ்வித தடையுமின்றி இந்திய இழுவைப்படகுகள் எமது கடற்கரையை அண்மித்து வருகைதந்து கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும்வரையில் கடற்படையினர் என்ன பார்த்துக்கொண்டி ருக்கின்றீர்கள்?

இவ்வாறு அத்துமீறி எமது கடற்பரப்பிற்குள் நுழைந்து எமது மீனவர்களின் வாழ்வாதார வளங்களை அழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளை கடற்படையினர் கட்டுப்படுத்த தவறுகின்றனர். இது எமக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

அத்து மீறி எமது கடற்பரப்புகளுக்குள் உள்நுழையும் இந்திய இழுவைப் படகுகளை கடற்படையினருக்குத் தெரிவதில்லையா?-என்றார்.

இதன்போது கடற்படை அதிகாரி பதிலளிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக 24மணித்தியாலங்களும் கடற்படையினர் கண்காணிப்புக்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அவ்வாறு அத்துமீறி எல்லைதாண்டிவரும் இந்திய இழுவைப்படகுகளை கடற்படையினர் ராடர் கருவிகள் மூலம் கண்காணித்து அவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கடற்படை அதிகரியினால் இதன்போது பதிலளிக்கப்பட்டது. (அ)

# நிர்ணயித்த திகதிகளில் பரீட்சைகள் நடைபெறும்

## பரீட்சை ஆணையாளர் நாயகம்

கொழும்பு, ஏப். 02

இனிவரும் காலங்களில் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை, உயர்தரம் மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைகளை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளிலேயே நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

பல்வேறு காரணங்களினாலும் பரீட்சை காலப்பகுதிகள் மாற்றமடைந்ததால் கடந்த காலங்களில் மாணவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதேவேளை, 2025ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் 22 முதல் 30 வரை நடைபெறவுள்ளது.

மேலும் 2026ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 09ஆம் திகதியும் உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதியும் சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 08ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
02.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சமஷ்டிக் கோரிக்கையை கைவிடாதிருத்தல்

தந்தை செல்வாவின் 128 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நடைபெற்ற நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தேசிய இனப்பிரச்னைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தாங்கள் ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்று சூளுரைத்ததை காணக்கூடியதாக இருந்தது.

அவரது கொள்கை உறுதிப்பாட்டைப் பாராட்டுகின்ற அதேவேளை, சமஷ்டி முறையின் அடிப்படையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கு தங்களிடம் ஏதாவது வழிவரைபடம் இருக்கிறதா என்று அவர் யோசித்துப பார்த்தாரா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

சமஷ்டிக் கோரிக்கையை தந்தை செல்வா தலைமையில் தமிழரசு கட்சி முன்வைத்து முக்கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் கடந்துபோயிருக்கிறது. இலங்கையில் சமஷ்டி முறை தொடர்பான விவாதத்துக்கு இந்த வருடத்துடன் நூற்றாண்டு நிறைவடைகிறது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய இளம் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே சிறந்தது என்ற கருத்தை முன்வைத்ததுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமிழர்களின் ஆதரவையும் அதற்கு கோரினார். ஆனால், அவரின் கருத்துக்கு அன்று தமிழர்கள் ஆதரவளிக்கவில்லை.

இலங்கையில் முதலில் தமிழர்கள் அல்ல, சிங்களவர்களே சமஷ்டி ஆட்சிமுறைக்கான கோரிக்கையை முன்வைத்தார்கள் என்பதை தமிழ்ச் சமுதாயத்தின் இன்றைய இளைய தலைமுறை யினர் அறிய மாட்டார்கள். சிங்களவர்கள் சமஷ்டி கோரிக்கையை கைவிட்ட பின்னர் அதுவும் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் வெளியேறிய பின்னர் மாத்திரமே தமிழர்கள் அதைக் கோரினார்கள்.

அன்றில் இருந்து இன்றுவரை (இடையில் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்ட மூன்று தசாப்தகாலம் தவிர) தமிழர்கள் தங்களது அரசியல் உரிமைப் பிரச்னைக்கான தீர்வாக சமஷ்டி முறையையே கோரி வந்திருக்கிறார்கள். ஆனால், வெறுமனே கோரிக்கையை வைப்பதைத் தவிர, தமிழ் அரசியல் தலைவர்களினால் சமஷ்டி முறையை அடைவதற்கான பாதை பற்றி ஏதாவது தெளிவு இருக்கிறதா?

இன்று பெரும்பாலும் வடக்கு, கிழக்கின் சகல தமிழ்க் கட்சிகளுமே சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வையே கோரி நிற்கின்ற போதிலும், அந்தக் கோரிக்கையின் இதுகாலவரையான வரலாற்றில் இருந்து எந்தப் படிப்பினையையும் பெற்றுக் கொண்டதாக இல்லை. கொள்கையைக் கைவிடமாட்டோம் என்று கூறுவதை கேட்க நன்றாகத்தான் இருக்கும். இது வெறுமனே "அடைந்தால் மகாதேவி அல்லது மரணதேவி" என்று சினிமா வசனம் பேசுவதைப் போன்றதல்ல.

நடைமுறைச் சாத்தியமான வழிவகைகள் குறித்துச் சிந்திப்பதற்கு இனிமேலும் தவறினால் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட மாட்டோம் என்று மேலும் ஒரு நூற்றாண்டுக்கு சூளுரைத்துக்கொண்டேயிருப்பதை தவிர தமிழர்கள் எதையும் காணப்போவதில்லை. முதலில் மாகாண சபைகளையாவது காப்பற்றுவதில் கவமை செலுத்துவது புத்திசாலித் தனமானதாக இருக்கும்.

# கிளிநொச்சி மாணவனுக்கு வடக்கு ஆளுநர் பாராட்டு



கிளிநொச்சி, ஏப். 02

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்த கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெ.திருக்குமரனை, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சந்தித்துத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு நேரடியாகப் பயணம் செய்த ஆளுநர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன் ஆகியோரைப் பாடசாலை அதிபர் ஐ.நிமல்ராஜ் வரவேற்றார்.

இப்பாடசாலையைச் சேர்ந்த மாணவன் தெ.திருக்குமரன் கணிதப் பிரிவில் தேசிய நிலையில் சாதனை படைத்துள்ள அதேவேளை, உயிரியல் பிரிவில் ஆ.கிரிஷோந்த் மற்றும் வர்த்தகப் பிரிவில் செல்வி க.மதுமினி ஆகியோர் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர். இந்தச் சாதனை மாணவர்களை ஆளுநர் பாராட்டியதுடன், இவர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த பெற்றோர், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தமது கடின உழைப்பாலும் சுயமுயற்சியாலும் மாபெரும் வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டிப் பேசிய ஆளுநர், "கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மாணவரொருவர் தேசிய நிலையில் முதலிடம் பெற்றுள்ளமை, மாகாணத்தின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது" எனக் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மேலும், "இந்தச் சாதனை மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குவதோடு, எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாகவும் திகழ வேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தினார். அத்துடன், இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் ஆளுநர் வெகுவாகப் பாராட்டினார். (அ)

# மனநலம், நரம்பியல் சுகாதார சேவைகளை வடக்கில் தடையின்றி வழங்க முன்னுரிமை!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 02

வடக்கு மாகாணத்தில் மனநலம் மற்றும் நரம்பியல் குறைபாடுகள் தொடர்பான சுகாதாரச் சேவைகளைத் தடையின்றி வழங்குவதற்கு மாகாண நிர்வாகம் முன்னுரிமை அளித்துச் செயற்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒட்டிசம் மற்றும் நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான "மாதவம்" சிகிச்சை நிலையத்தை நிரந்தர உத்தியோகபூர்வமான கட்டமைப்புக்குள் உள்ளீர்ப்பது மற்றும் அதன் எதிர்கால உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே ஆளுநர் அவ்வாறு தெரிவித்தார்.

தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் "மாதவம்" சிகிச்சை நிலையத்தை ஒரு உத்தியோகபூர்வ நிறுவனமாக அங்கீகரித்து, அதனை நிர்வகிப்பதற்கு உரிய முகாமைத்துவக் குழுவொன்றை நியமிக்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது மத்திய சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டு ஒருங்கிணைப்பில் செயற்படவுள்ளது.

அத்துடன், புதிய சிகிச்சை நிலையத்துக்காகக் கைதடியில் அரச காணி உத்தியோகபூர்வமாகச் சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கெனத் துறைசார் நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட நவீன கட்டட வரைபடங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

தேசியக் கொள்கைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் தலா ஒரு சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் மற்றும் அதற்கான ஆளணி அனுமதிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒட்டிசம் குறைபாட்டுக்கு மாத்திரமன்றி, மூளை வளர்ச்சி தாமதம், அறிவுசார் குறைபாடுகள், மூளை முடக்குவாதம் மற்றும் ஏனைய நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகளுக்கும் இந்த நிலையத்தினூடாக முழுமையான சிகிச்சைகளை வழங்குவது தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

உளவள மற்றும் நரம்பியல் சுகாதாரத் துறையில் நிலவும் ஆளணிப் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினூடாகப் பேச்சுச் சிகிச்சை மற்றும் தொழில்சார் சிகிச்சை போன்ற இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைநெறிகளை ஆரம்பித்து நிபுணர்களை உருவாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும், மாகாண மற்றும் மத்திய சுகாதார அமைச்சுகளின் நிதியொதுக்கீடுகளுக்கு அப்பால், வெளிவாரியான கொடையாளர்களின் உதவிகளைச் சட்டபூர்வமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கான முறையான வழிமுறைகளை ஏற்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் துறைசார் மருத்துவ நிபுணர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 02 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 19
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**இடபம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**துலாம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வாகனத்தை இயக்கும்போது அலைப்பேசியில் பேச வேண்டாம். உத்தியோகத்தில் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல்கள் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

# கிளிநொச்சி பிராந்தியத்தில் இராணுவ பிரசன்னம் அவசியம்

## யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத் தளபதி

கிளிநொச்சி, ஏப். 02

கிளிநொச்சி பிராந்தியத்தில் நீண்டகால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வலுவான இராணுவப் பிரசன்னம் அவசியமானது என யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் கே.டி.பி. டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் 55ஆவது காலாட்படைப் பிரிவின் கீழ் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் கலாசார விழுமியங்களை மதித்து, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் இராணுவத்தினர் தமது கடமைகளை பொறுப்புடன் முன்னெடுக்கவேண்டும் என அவர் இதன்போது அறிவுறுத்தினார்.

குறிப்பாக சமூக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் போதைப்பொருள் தொடர்பான செயற்பாடுகளில் இருந்து விலகி, ஒழுக்கத்துடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் செயற்படவேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சிப்பாய்களின் நலன்புரி வசதிகள், தங்குமிட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் அதிகாரிகளுடன் அவர் விரிவாகக் கலந்துரையாடினார்.

முலங்காவில் பகுதியில் அமைந்துள்ள 7ஆவது இலங்கை இலகு காலாட்படைப் பயிற்சிப் பாடசாலை உள்ளிட்ட பல முக்கிய படைப்பிரிவுகளின் செயற்பாடுகளையும் அவர் இதன்போது நேரில் பார்வையிட்டார். (அ)

# சிறுவர்கள் மீதான வன்கொடுமை கண்டித்து நல்லூரில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 02

ஈழத்தமிழர் மகளிர் சிறுவர் உரிமை பாதுகாப்பு மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர், சிறுமியர்கள் மீதான வன்கொடுமையை கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.



நல்லூர் ஆலய பின் வீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் பெண்கள் அதிகமாகக் கலந்து கொண்டு தமது உரிமைகள், சிறுவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

இதன்போது "தமிழினத்தின் விழிப்பே விடுதலையின் முதற்படி", "இராணுவமே வெளியேறு", "போதைவாஸ்து பாவனைகளை கட்டுப்படுத்து" உள்ளிட்ட வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# சாதனை மாணவனை நேரில் பாராட்டினார் சிறீதரன் எம்.பி.



கிளிநொச்சி, ஏப். 02

வெளியாகிய உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தினை சேர்ந்த தெய்வேந்திரன் திருக்குமரன் கணிதத்துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்றுள்ளார்

குறித்த மாணவன் மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று சாதித்த மாணவர்களை நேரில் பாராட்டி சென்றுள்ளார் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபருமான சிவஞானம் சிறிதரன். (அ)

# வவுனியா செட்டிகுளத்தில் தேசிய நேர்மைவார நிகழ்வு

வவுனியா, ஏப். 02

வவுனியா செட்டிகுளத்தில் தேசிய நேர்மை வாரம் இடம் பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக செட்டிகுளம் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மற்றும் துட்டுவாகை முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சிரமதானம், சித்திரம், கோலப்போட்டி, கதை கூறல் முதலான பல நிகழ்வுகள் நடைபெற்றன.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் கே.சுலோஜனியின் வழிகாட்டலில் நடைபெற்ற இந் நிகழ்வில் சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு கோடீஸ்வரப் பிள்ளை குருக்கள், செட்டிகுளம் இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆலயப் பரிபாலன சபையினர், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். (அ)

# பங்குனி உத்தர பொங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 02

பருத்தித்துறை பன்னையம்பதி சிறீ நாகபூசணி அம்பாள் ஆலயம் பங்குனி உத்தர பொங்கல் திருவிழா நேற்று மிக சிறப்பாக இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பருத்தித்துறை சிவன் ஆலயத்திலிருந்து காலை 8:00 மணியளவில் பன்னக்கட்டை பன்னையம்பதி நாக பூசணி அம்பாள் ஆலயம் வரை பால் குட பவனி இடம் பெற்றதை தொடர்ந்து பன்னையம்பதி நாக பூசணி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்றன.

ஆலயத்தின் பிரதம தர்மகர்த்தா ஜெயகோபி தலைமையில் இடம்பெற்ற பங்குனி உத்தர பூசைகளில் பிரதேச மக்கள் பலரும் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யூரியா உர தட்டுப்பாடு காரணமாக உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலில்!

## விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 02

விவசாயத் துறையை அச்சுறுத்தும் வகையில் ஏற்பட்டுள்ள யூரியா உரத்தட்டுப்பாடு காரணமாக, 2026 ஆம் ஆண்டு சிறுபோக நெல் விளைச்சல் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மார்ச் மாத தொடக்கத்தில் சுமார் ஒரு இலட்சம் தொன் உரங்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ள நிலையில், இறக்குமதி செய்யப்பட வேண்டிய உரங்களில் பாதிக்கும் மேற்பட்டவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது தாமதமடைந்துள்ளதாகவோ தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு, கடந்த கால நுகர்வுத் தரவுகளின் அடிப்படையில் கமநல சேவை நிலையங்கள் ஊடாக உரங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக நெற்செய்கைக்கும், அதனைத் தொடர்ந்து சோளம் மற்றும் தேயிலை பயிர்ச் செய்கைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

தற்போதைய உரப் பற்றாக்குறை நீடித்தால், இம்முறை அறுவடை 15 முதல் 20 வீதம் வரை வீழ்ச்சியடையக்கூடும் எனவும், இதனால் வரும் காலங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் பேராசியர் புத்தி மாரம்பே உள்ளிட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றங்கள் மற்றும் சீனா போன்ற நாடுகள் ஏற்றுமதிக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இந்த உர நெருக்கடி தீவிரமடைந்துள்ளது.

ரஷ்யா போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும், உர விநியோகம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

உலக சந்தையில் யூரியா விலை அதிகரித்து வருவதால், சாதாரண விவசாயிகளே இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுவர் எனவும், எனவே எதிர்கால உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் போதிய உரக் கையிருப்பைப் பேணவேண்டியது அவசியமெனவும் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# நாட்டில் கடும் வெப்பத்தால் நோய்கள் ஏற்படும் அபாயம்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 02

நாடு முழுவதும் நிலவும் கடும் வெப்பமான வானிலை காரணமாக, வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்படும் அபாயம் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு, பாடசாலைகள் மற்றும் பணியிடங்களின் நாளாந்த நடவடிக்கைகளில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் நீண்ட கால நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய தரப்பினர், இந்த கடும் வெப்பமான காலப்பகுதியில் நீர்ச்சத்து குறைபாடு, வெப்பத்தாக்கம் மற்றும் தோல் பாதிப்பு போன்ற நோய் தாக்கங்களுக்கு உள்ளாகும் அபாயம் காணப்படுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர். எம். சதுன் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உச்சகட்ட சூரிய வெப்பம் நிலவும் நேரங்களில் வெளியில் செல்வதைக் குறைக்கும் வகையில் நிறுவனங்கள் தமது கால அட்டவணையை மாற்றியமைக்க வேண்டும்.

வெளிப்புற நடவடிக்கைகளை அதிகாலை அல்லது மாலை வேளைகளுக்கு மட்டுப்படுத்த வேண்டும். குறிப்பாக, பாடசாலைகளில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செயல்பாடுகளை குளிர்ச்சியான நேரங்களில் நடத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வெளிப்புறங்களில் பணிபுரியும் ஊழியர்களைக் கொண்ட பணியிடங்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

நண்பகல் வேளையில் நேரடியாக சூரிய ஒளியில் ஈடுபடுவதைத் தவிர்த்து, காலை 10.30 மணிக்கும் முன்னதாக அல்லது மாலை 3.30 மணிக்குப் பின்னதாக பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர். (எ)

# அரச ஊழியர்களுக்கு விசேட கடன் திட்டம்!

கொழும்பு, ஏப். 02

அரச ஊழியர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில், 2026 ஆம் ஆண்டிலும் அவர்களுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபா வரை விசேட கடன்களை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போதைய வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டும், அரச ஊழியர்களுக்குப் பொருளாதார ரீதியாகப் பக்கபலமாக இருப்பதற்காகவும் கடந்த வருடங்களில் சலுகை வட்டி வீதத்தில் இவ்வாறான விசேட கடன் வசதிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தை மேலும் நீடித்து 2026 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்திற்கான வட்டி வீதத்தில் ஒரு பகுதியை அரசாங்கம் மானியமாக ஏற்கும் சிறப்பு முறைமையொன்றும் இதன்கீழ் உருவாக்கப்படவுள்ளது. அரசாங்கத்தின் பிரதான வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றுடன் இணைந்து இத்திட்டம் கூட்டாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை தற்போது முழுமையான உடன்பாட்டை வழங்கியுள்ளது. (அ)

# பெரமுன வேட்பாளரே அடுத்த ஜனாதிபதி!

## சாகர காரியவசம் உறுதி

கொழும்பு, ஏப். 02

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவினால் நிறுத்தப்படும் வேட்பாளரே நிச்சயம் வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதியாவார்” என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய ஆட்சியின் கீழ் நாட்டில் ஜனநாயக உரிமைகள் படிப்படியாக இல்லாதொழிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் மீது அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகின்றன. இத்தகைய ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து அணிதிரள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எதிரணிக்குரிய பொறுப்பை பொதுஜன பெரமுன கட்சி தம்மால் முடிந்தவரை செம்மையாக நிறைவேற்றி வருகின்றது. தற்போதைய அரசைத் தேர்தல் மூலம் தோற்கடிப்பது எமக்குச் சவாலான விடயமே அல்ல.

பொதுஜன பெரமுனவின் தலைமையின் கீழ் களமிறக்கப்படும் வேட்பாளரே இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பது உறுதி. அதற்கான மக்கள் பலம் இப்போதும் எங்களிடமே உள்ளது-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# ரஷ்யாவின் எரிபொருள் உதவிகள் இலங்கையில் பாதிப்பை குறைக்கும்!

## நீதிக்கும் சமாதானத்திற்குமான முஸ்லிம் இளைஞர் மன்றம் தெரிவிப்பு

கல்முனை. ஏப். 02

மத்திய கிழக்கு போர் காரணமாக ஆசிய நாடுகள் உள்ளிட்ட உலகளாவிய அளவில் எரிபொருள் நெருக்கடி நிலை உருவாகியுள்ள சூழலில், இலங்கைக்கு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பெற்றோலிய உதவியை வழங்க முன்வந்துள்ள ரஷ்ய கூட்டாட்சி அரசின் நடவடிக்கை மிகவும் பாராட்டத்தக்கதென நீதிக்கும் சமாதானத்திற்குமான முஸ்லிம் இளைஞர் மன்றம் தெரிவித்துள்ளது.

கல்முனையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்ற மேற்படி அமைப்பின் செயலாளர் கலீல் எஸ். முஹம்மது வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இராஜதந்திர முயற்சி காரணமாகவும் இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பினாலும் இவ்விடயம் சாத்தியமாகியுள்ளது.

ரஷ்யாவின் இந்த உதவியானது எமது நாட்டின் தற்போதைய எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வதோடு, பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரமாக அமைந்துள்ளதுடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும், எரிசக்தி துறையில் நிலைத்தன்மை ஏற்படுத்துவதற்கும் முக்கிய பங்களிப்பாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் யுத்த சூழ்நிலை காரணமாக சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள விநியோகத் தடைகள் மற்றும் விலை உயர்வுகள் ஆகியவற்றின் பின்னணியிலும், இலங்கையுடன் கொண்டுள்ள நட்பு மற்றும் நல்லிணக்கத்தை முன்னிறுத்தி ரஷ்யா இத்தகைய உதவியை வழங்க முன்வந்திருப்பது பெரும் வரப்பிரசாதமாகும்.

இந்த நடவடிக்கை, இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சிரமங்களை குறைப்பதோடு, போக்குவரத்து, மின்சாரம் உற்பத்தி மற்றும் தொழில் துறைகளின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கும் ஆதரவாக அமையும்- என்று சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கல்முனை மாநகரில் சிறப்பாக நடந்த சந்தான ஈஸ்வரரின் பெரும் ரதபவனி!



கல்முனை, ஏப். 02

கல்முனை நகர் வளர் கௌரி அம்பிகை உடனுறை சந்தான ஈஸ்வரர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ மாபெரும் மாநகர அழகு ரதபவனி நேற்று புதன்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ கோலாகலமாக நடைபெற்றது.

ஆலயத் தலைவர் பிரபல தமிழாசான் வே.செவ்வேட்குமரன் தலைமையில் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை அதிகாலை முதல் நடைபெற்றது.

முன்னதாக, பறவைக்காவடிகள் செல்ல தொடர்ந்து காவடிகள் மூன்று தேர்கள் மாநகரினூடாக அசைந்து அசைந்து வந்த காட்சி அனைவரையும் கவர்ந்தது.

அலங்கார சித்திரத் தேர்களை பெண்கள்வடம்பிடித்து ஆறுமணி நேரமாக இழுத்து வந்தார்கள்.

கல்முனை ஆதார வைத்திய சாலை அபிவிருத்தி குழுவினர் சந்திரசேகரன் ராஜன் தலைமையில் பக்தர்களுக்கு இளநீர் வழங்கினர். அதேபோன்று பல அமைப்புகள் இடையிடையே நீராகாரம் வழங்கினர்.

கொளுத்தும் வெயிலிலும் பக்தர்கள் சளைக்காமல் பக்தி பூர்வமாக ரதபவனியில் பங்கேற்றமை உணர்வாக இருந்தது.(அ)


# பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனங்கள்



கல்முனை, ஏப். 02

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (ஜீ.எம்.எம்.எஸ்) மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்புப் பணிகளை மேம்படுத்தும் நோக்கில் ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கும் நிகழ்வும், பெருநாள் ஒன்றுகூடல் கொண்டாட்டமும் நேற்று முன் தினம் மாலை பாடசாலை கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சமூக ஆர்வலர் ஏ.ஆர்.எம். ஹசீம் மற்றும் உபைத் லேர்னஸ் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். றிப்னாஸ் ஆகியோரின் ஒத்துழைப்பில் இந்த ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டன. இச்சாதனங்கள் பாடசாலையின் அறிவிப்புகள், நிகழ்வுகள் மற்றும் கல்வி சார் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுக்க உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதன் போது அம்பாள் அலங்கரிக்கப்பட்டு தேரில் எழுந்தருளி வெளிவீதியுலா வந்தார். (அ)

# திருமலை மதத் தலைவர்களுடன் சிறீதரன் எம்.பி. முக்கிய சந்திப்பு





திருமலை, ஏப். 02

திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், நேற்று முன்தினம் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய பேரருட் தந்தை நோயல் இம்மானுவேல் ஆண்டகை மற்றும் தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரைச் சந்தித்து சமகால அரசியல் நிலவரங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் இல்லம் மற்றும் கன்னியா, சிவன்மலை, தென்கயிலை ஆதீனம் ஆகியவற்றில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும், தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் பிரதேச சபை உறுப்பினர்களான பாரதிதாசன் எழில்வேந்தன், தனராஜ் ஆகியோரும் உடனிருந்தனர். (அ)

# கற்பிட்டி பகுதியில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பொருட்கள் மீட்பு

புத்தளம், ஏப். 02

கற்பிட்டி - குடாவ கடற்கரை பகுதியில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் ஏலக்காய் உள்ளிட்ட பொருள்களை கடற்படையினர் கைப்பற்றினர்.

கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, கடற்படையினர், தீவைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடற்கரையை உள்ளடக்கி வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கற்பிட்டி குடாவ கடற்கரைப் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, கடற்கரைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான 13 பொதிகள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 170 கிலோகிராம் முந்திரி பருப்புகள், 180 சவர்க்காரக்கட்டிகள், 90 கிலோகிராம் ஏலக்காய், பூச்சிக்கொல்லி திரவம் நிரப்பப்பட்ட 169 சிறிய போத்தல்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் அடங்கிய 90 சிறிய பொதிகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அதலபாதாளத்தில்...

உரிய வசதிகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மறுபுறம் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் சிறையில் இருப்பவர்களுக்கும் மனிதாபிமானம் என்ற போர்வையில் கேக் ஊட்டி பிறந்தநாள் கொண்டாடும் விசித்திரமான கலாசாரம் ஒன்றை இந்த அரசாங்கம் சிறைச்சாலைக்குள் உருவாக்கியுள்ளது.

நிதி குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் இன்று சட்டத்தை நிலைநாட்டுவதை விடுத்து குற்றவாளிகளுக்கு கேக் ஊட்டும் இடங்களாக மாறியுள்ளன. பொலிஸ் திணைக்களம் தனது பொறுப்புகளை மறந்து செயற்படுவதுடன் சட்டத்தை வளைத்து திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் சாதகமாக தற்போதைய ஆட்சியாளர்கள் களம் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

முன்னைய காலங்களில் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த தலைவர்களை விட விடுதலைப் பந்தை வழங்கிய தந்தை, நிழல் தந்த தந்தை, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தந்தை எனப் பலரை மக்கள் போற்றினர். ஆனால் இன்று நிலக்கரியைக் கொண்டு வந்த தந்தை, வியாபாரத் தந்தை எனப் பல பெயர்களில் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றும் கூட்டமே ஆட்சியதிகாரத்தில் உள்ளது. தற்போதைய ஆட்சியாளர்கள் பாராளுமன்றத்தில் ஓரினச்சேர்க்கை தொடர்பான விடயங்களைச் சட்டபூர்வமாக்கி கல்வியைச் சீரழிப்பதுடன் மகா சங்கத்தினரை வனசாரிகள் என அவமதிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் உலகளாவிய நெருக்கடியின் போது மக்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டதுடன் அத்தியாவசியப் பொருட்களும் மருந்துப் பொருட்களும் வீடுகளுக்கே கொண்டு வந்து வழங்கப்பட்டன. ஆனால் இன்று முறைமை மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களைப் பட்டினியில் வாட விட்டுள்ளனர். பாண் அல்ல இன்று உண்பதற்குப் புற்கள் கூட இல்லாத வறண்ட நிலையை நாடு எதிர்நோக்கியுள்ளது. பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு போன்றவற்றால் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு உள்ளாகியுள்ள போதும் தேர்தல் காலத்தில் அறுநூறு ரூபாய் மின்சாரப் பட்டியலை இருநூறு ரூபாயாகக் குறைப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை-என்றார். (அ)

## இலங்கைக்கு...

மத்திய கிழக்கின் போர்ச் சூழலால் இலங்கையின் எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தனது நாடு அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்று தெரிவித்த ரஷ்ய எரிசக்தி பிரதி அமைச்சர், இலங்கைக்குத் தற்போது தேவையான எரிபொருளை வழங்குவதற்கும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க உடன்பட்டுள்ளார்.

அதற்கமைய, ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேவையான எரிபொருள் கையிருப்புகளை விரைவாக விடுவிக்கும் செயல்முறையை முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், இதற்காக ரஷ்ய நிறுவனங்களுக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஒப்பந்தங்களை மேற்கொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளைத் செய்து தருவதாகவும் கூறினார்.

மேலும், இலங்கையின் எரிசக்தித் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் நிலக்கரியை வழங்கவும் தனது நாடு தயாராக இருப்பதை அவர் இங்கு வலியுறுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்திப் பாதை எதார்த்தமாவதைக் காண்பதே தனது நாட்டின் விருப்பம் என்றும், தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நிலையான அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரஷ்ய அரசாங்கம் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சி ம.வி...

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவாகி, 2024 இல் தேசிய கணித வினாடி வினாப் போட்டியில் நான்கு பதக்கங்களை வென்றுள்ளார்.

அத்துடன், உயர்தர வணிகப் பிரிவில் மட்டக்களப்பு, காத்தான்குடி மகா வித்தியாலய மாணவன் மொஹமட் சுபைதீன் மொஹமட் பர்தான், அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக, பாடசாலையின் அதிபர் அஹமட் லெப்பை சப்ரி உறுதிப்படுத்தினார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன் தினம் இரவு வெளியிடப்பட்டன.

இதற்கமைய, இந்த பெறுபேறுகளை றறற. னழநநெவள.டம என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதியாக நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு இரண்டு இலட்சத்து 81 ஆயிரத்து 810 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதனிடையே, பரீட்சை மோசடிகள் அல்லது ஏனைய காரணங்களுக்காக, 111 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## வீதி விளக்குகள்...

“மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பிரதான வீதிகள் மட்டுமன்றி கிளை வீதிகளிலும் விளக்குகள் அணைக்கப்படுகின்றன.

இதனால் வீதிகள் கடும் இருளில் மூழ்கியுள்ளன.

வேலை நிறைவடைந்து வீடு திரும்பும் பெண்கள் மற்றும் மேலதிக வகுப்புக்கள் நிறைவடைந்து செல்லும் மாணவிகளின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

திருடர்கள் இருளைப் பயன்படுத்தி குற்றங்களில் ஈடுபட இது வாய்ப்பாக அமைகின்றது.” என அவர் சுட்டிக்காட்டினார்.

இரவு 10 மணிக்கு மேல் விளக்குகளை ஒளிரச் செய்வது திருடர்கள் கொள்ளையடித்த பொருட்களைப் பார்ப்பதற்கா என கேள்வி எழுப்பிய அவர், நிலக்கரி ஊழலில் ஈடுபட்டவர்களை ஜனாதிபதி எவ்வித தயக்கமுமின்றி பாதுகாத்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். (அ)

## மருத்துவர்...

கீழ்ப்படியவோ அல்லது அரசியல் உள்நோக்கம் கொண்ட இடமாற்றப் பட்டியல்களுக்கு அடிபணியவோ தயாராக இல்லை என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க உதவிச் செயலாளர் ஹன்சமால் வீரசூரிய தெரிவித்தார்.

“மருத்துவர்கள் யாருடைய கட்டளைக்கும் கட்டுப்பட்டு இருக்கத் தயாராக இல்லை. நாங்கள் யாருக்கும் கடன்பட்டவர்கள் அல்ல, பயப்படுவதும் இல்லை. நாங்கள் எப்போதுமே தலைநிமிர்ந்துதான் பணியாற்றி வருகிறோம்,” என்று அவர் கூறினார்.

மருத்துவர்கள் அரசியல் தேவைகளுக்குப் பணியவோ அல்லது அரசியல் கட்சிகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்படும் இடமாற்றப் பட்டியல்களை ஏற்கவோ தயாராக இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

“நாங்கள் அரசியல் தேவைகளுக்குப் பணியத் தயாராக இல்லை. கட்சியின் தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட இடமாற்றப் பட்டியல்களை ஏற்கவும் நாங்கள் தயாராக இல்லை,” என்று வீரசூரிய கூறினார்.

மருத்துவர்களின் கவலைகள் கவனத்தில் கொள்ளப்பட்டால், அவர்கள் சுகாதார சேவைக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். ஆனால், மருத்துவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக நடத்துவது சுகாதார அமைச்சுக்குக் கடுமையான சவால்களை உருவாக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

“எங்கள் கவலைகளைக் கருத்தில் கொள்ளாமல் மருத்துவர்கள் கீழ்நிலை ஊழியர்களைப் போல நடத்தப்பட்டால், நீங்களும் சுகாதார அமைச்சகமும் சுமுகமாகச் செயல்படுவதற்கு கிடைக்கும் நேரம் குறைவாகவே இருக்கும்,” என்று அவர் எச்சரித்தார். (அ)

## தையிட்டியில்...

பௌர்ணமி தினங்களிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், நேற்று முன் தினம் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமான போராட்டம் மாலை 6.00 மணிக்கு நிறைவடைந்து நேற்று காலை முதல் மாலை வரை மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கேற்றனர். (அ)

## சர்வதேச...

அதிகரிக்கப்படவுள்ளதால் 2 கோடியே 20 இலட்சம் மக்களும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ள குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் தாய்மார்களுக்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துடன் கலந்தாலோசித்து விசேட வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்-என கூறினார்.

விவசாயத் துறை பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து நெல், சோளம், தேயிலை உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சிறுபோக பருவம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் விதை மற்றும் யூரியாவிற்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறும் அவர் கோரினார்.

புத்தாண்டை முன்னிட்டு மூடப்படும் தொழிற்சாலைகள், புத்தாண்டுக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் எனச் சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, பராட்டே சட்டத்தின் அமுலாக்கத்தை இடைநிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ)

## எரிபொருளை...

எரிபொருள் கப்பல்கள், பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

எரிபொருள் கப்பல்கள் வருவதில் தற்போது ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு, நாட்டின் பிரதான இரு முனையங்களிலும் நிலவும் நெரிசலே காரணமாகும்.

ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான எரிபொருள் சரக்குகள் பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் இறக்கும் திறன் கொண்ட இரண்டு முக்கிய இடங்கள் மட்டுமே தற்போது நாட்டில் உள்ளன.

ரஷ்ய விநியோகத்தர்களிடம் இருந்து கப்பல்கள் வந்து சேரும் நேரத்தைத் திட்டமிடுவது உட்பட தளபாட மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

இந்த நிலையில், டீசலை ஏற்றிய கப்பல் ஒன்று, நாளையதினம் நாட்டை வந்தடையவுள்ளது.

சுமார் 32 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பல், நாட்டை வந்தடையவுள்ளது.

5 ஆயிரம் மெற்றிக் தொன் விமான எரிபொருளும் கொண்டுவரப்படுகின்றன.

எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில், மேலும் இரண்டு டீசல் கப்பல்கள் நாட்டிற்கு வரவுள்ளன.

அதன்படி, ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில், எதிர்பார்த்த அனைத்துக் எரிபொருள் கப்பல்களும் நாட்டை வந்தடையவுள்ளன.

கடந்த மாதமும் எதிர்பார்த்த அனைத்துக் கப்பல்களும் நாட்டை வந்தடைந்தன.

எனவே, பண்டிகைக் காலம் முடிந்து மே மாதம் முடியும் வரை, நாட்டில் எரிபொருள் கையிருப்பில் இருக்கும்.

எனினும், எரிபொருள் விலை அதிகமாக இருப்பதால், மக்கள் அதனை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## தமிழ் முற்போக்கு...

அடிப்படையில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் மலையக மக்கள் தொடர்பான அவசர பிரச்னைகள் என்பன தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் மற்றும் கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர்கள் சிலரும் பங்கு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# இயக்கச்சியில் இராணுவத் தேவைக்காக காணி சுவீகரிப்பை எதிர்த்து போராட்டம்

## இன்று அனைவரையும் அணி திரள அழைப்பு

கிளிநொச்சி, பெப். 02

கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் இராணுவ தேவைக்காக 25 ஏக்கர் காணியை சுவீகரிக்கும் முயற்சிக்கு எதிராக இன்று வியாழக் கிழமை எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இயக்கச்சி பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான 25 ஏக்கர் காணியை இராணுவ முகாமினை அமைக்கும் நோக்குடன் நிரந்தரமாக சுவீகரிக்கும் முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இந்நிலையில், காணி சுவீகரிப்பின் முதல்கட்டமாக காணியினை அளவீடு செய்யும் பணிகள் நில அளவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில் தனியார் காணிகளை இராணுவ தேவைக்கு சுவீகரிப்பதற்கு எதிராக இயக்கச்சி பகுதியில் பாரிய போராட்டம் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த போராட்டத்திற்கு வேறுபாடுகள் இன்றி அனைத்து தரப்பினரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. (அ)

# எரிசக்தித்துறையில் நிலவும் முறைகேடுகளை சீர் செய்வதற்காக மறுசீரமைப்பு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 02

இலங்கையின் எரிசக்தித் துறையில் நீண்டகாலமாக நிலவி வரும் முறைகேடுகள் மற்றும் வினைத்திறனற்ற கொள்முதல் நடைமுறைகளைச் சீர்செய்யும் நோக்கில், பாரிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எரிசக்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக, மின்சார உற்பத்திக்கான பிரதான மூலப்பொருளான நிலக்கரி கொள்வனவு நடைமுறைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொள்முதல் கட்டமைப்பில் பலவீனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

கடந்த காலங்களில் நிலக்கரி இறக்குமதியின் போது தரம் குறைந்த நிலக்கரி கொண்டுவரப்பட்டதாக எழுந்த முறைப்பாடுகள் மற்றும் கேள்வி கோரல் நடைமுறைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்துக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான பின்னணியிலேயே, எரிசக்தித் துறையின் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பவும், மின்சார உற்பத்தியில் தடையற்ற விநியோகத்தை உறுதிப்படுத்தவும் இந்த மறுசீரமைப்புகள் அவசியமானவை என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# தமிழ் முற்போக்கு கூட்டணியினர் கனேடியத் தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 02

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுகுழு கனேடிய தூதுவர் இஸபெல்லா மார்டினை சந்தித்து கலந்துரையாடியது.

இந்த சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அரசியல் குழு உறுப்பினர்களான, முருகேசு பரணீதரன், பாரத் அருள்சாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளதாவது-

இறுதி கட்டப் போர் காலத்தில், கொழும்பு தெருக்களில் திரிந்த வெள்ளை வான் கடத்தல்களுக்கு எதிரான எனது போராட்டத்தின் போது, எனக்கு தஞ்சம் தந்த பழைய இல்லம், கொழும்பில் உள்ள கனடா இல்லமாகும்.

எமது கூட்டணியின் நலிவுற்ற மலையக மக்கள் சார்ந்த போராட்டம் தொடர்பில், எடுத்து கூறினோம்.

மலையக தமிழரில், கூலி தொழிலாளர் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே. ஆகவே மலையக தமிழரின் அனைத்து பிரச்சினைகளையும், தொழிலாளர் பிரச்னையாக சுருக்குவது முறையற்றது. தொழிலாளர் தொகை ஆக ஒரு இலட்சம் பேர் மட்டுமே.

இன்று இன அடையாளம் கொண்ட 15 இலட்ச சிறுபான்மை தேசிய இனமாக மலையக சமூகம் வளர்ந்துள்ளது.

இன்று முழுமை அற்ற குடியுரிமை நவீன அடிமைதன அறிகுறிகள் ஆகிய அடிப்படை கவலைக்குரிய நிலைமைகளில், நமது மக்கள் தோட்ட பிரதேசங்களில் வாழ்கிறார்கள். இந்த கருத்துகளை நாம் எடுத்து கூறியதை தூதர் தெளிவாக புரிந்து கொண்டார்.

கனேடிய-உலகளாவிய உதவி கரங்கள், மனித உரிமை கண்காணிப்பு, ஆகியன நலிவுற்ற நமது மக்களையும் அடைய வேண்டும்.அதை கனடா உறுதி படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)




# நேற்று முதல் உயர்ந்த மின்சாரக் கட்டணம்!

கொழும்பு, ஏப். 02

நாட்டில் நேற்று முதல் மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

இதற்கமைய, வீட்டுப்பாவனை, கைத்தொழில் மற்றும் அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக்கான கட்டணங்களும் வெவ்வேறு விகிதங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோர் முதல் அதிகப்படியான பாவனையாளர்கள் வரை அனைவருக்குமே இந்தக் கட்டண உயர்வு சுமையை ஏற்படுத்தியுள்ளது:

30 அலகுகளுக்கு கீழ்: 4.3 வீதம் அதிகரிக்கப்பட்டு, ஒரு அலகுக்கான கட்டணம் 15 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

30 - 60 அலகுகள்: 6.9 வீதம் அதிகரிக்கப்பட்டு, ஒரு அலகு 45 ரூபாயாக வசூலிக்கப்படும்.

61 - 90 அலகுகள்: 6.9 வீதம் அதிகரிக்கப்பட்டு, ஒரு அலகு 120 ரூபாயாக உயர்ந்துள்ளது.

91 - 180 அலகுகள்: 7.2 வீத கட்டண உயர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கான கட்டணம் 420 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

180 அலகுகளுக்கு மேல்: ஆகக்கூடிய அளவாக 25 வீத கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் முக்கியத் தூண்களாகக் கருதப்படும் ஏனைய துறைகளுக்கும் கட்டணங்கள் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளன.

கைத்தொழில் துறை: 8.7 வீதம் உயர்வு.

ஹோட்டல்கள் : 9.9 வீத உயர்வு.

அரச நிறுவனங்கள்: 14.4 வீத உயர்வு.

மதஸ்தலங்களைப் பொறுத்தவரை, 180 அலகுகளுக்குக் குறைவான மின்சாரப் பாவனைக்கு எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. எனினும், 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மதஸ்தலங்களுக்கு 9.6 வீத கட்டண உயர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய மின்னுற்பத்தி செலவுகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# இலங்கை போதைப்பொருள் பின்னணியில் இயங்கும் 5 வெளிநாட்டு கடத்தல் மன்னர்கள்!

கொழும்பு, ஏப். 02

இலங்கையில் போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் சிறு அளவிலான விற்பனை தொடர்பாக ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்ட போதிலும், நாட்டில் போதைப்பொருள் வர்த்தகமானது பிரதானமாக ஐந்து முக்கிய போதைப்பொருள் கடத்தல் மன்னர்களால் கட்டுப்படுத்தப்படுவதாக பொலிஸார் வெளிப்படுத்தியுள்ளனர்.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பிரதி பொலிஸ் மாஅதிபர் சந்தன கொடிதுவக்கு இது குறித்து தெரிவிக்கையில், இந்த ஐந்து போதைப்பொருள் மன்னர்களும் இலங்கை பிரஜைகள் என்றும், தற்போது டுபாய் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து செயற்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்த நபர்கள் இலங்கையில் நேரடியாகத் தங்கியிருக்காமல், மறைகுறியாக்கப்பட்ட தகவல் தொடர்பு அமைப்புகளைப் பயன்படுத்தித் தங்களது வலையமைப்புகளைத் தூரத்திலிருந்தே நிர்வகித்து வருவதாக நம்பப்படுகிறது.

"அவர்கள் இலங்கையில் இல்லை. டுபாய் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இருந்தே செயற்படுகிறார்கள். உள்ளூர் வலையமைப்புகளை இயக்குவதற்கு அவர்கள் மிகவும் பாதுகாப்பான தகவல் தொடர்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர்," என்று பிரதி பொலிஸ் மாஅதிபர் கூறினார்.

இந்த நபர்கள் தாங்கள் வசிக்கும் நாடுகளில் உள்ள செல்வாக்கு மிக்க நபர்களுடன் வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறான தொடர்புகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் கொண்டுள்ள இரட்டைக் குடியுரிமை என்பன, அவர்களைச் சட்ட ரீதியான வழிகளில் மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவதில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் விளக்கினார். (அ)

# 176,527 மாணவர்கள் பல்கலைக்கு தகுதி!

கொழும்பு, ஏப். 02

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், 176,527 மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சைக்கு ஒட்டுமொத்தமாக 281,810 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 176,527 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

பரீட்சை மோசடிகள் அல்லது ஏனைய காரணங்களுக்காக 111 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பெறுபேறுகள் தொடர்பாகத் திருப்தியடையாத மாணவர்கள், தமது விடைத்தாள்களை மறுசீராய்வு செய்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஏப்ரல் 06 ஆம் திகதி முதல் ஏப்ரல் 22 ஆம் திகதி வரை இணையத்தளம் ஊடாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# இலங்கையின் தேங்காய் உற்பத்தி பொருள்கள் ஏற்றுமதி பின்னடைவு

கொழும்பு, ஏப். 02

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றங்கள் காரணமாக, இலங்கையின் தேங்காய் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இந்த மோதல் சூழலால் உள்நாட்டுத் தேங்காய் சார்ந்த உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் கடும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நயனி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கையிலிருந்து அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும் தம்பிலி எனப்படும் செவ்விளநீர் ஏற்றுமதியும் இதனால் முழுமையாக முடங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்றுமதி வருவாயில் முக்கிய பங்கு வகிக்கும் தென்னை மற்றும் அது சார்ந்த உற்பத்தித் துறையில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் முடக்கம், நாட்டின் பொருளாதாரத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media